## Copy of Deposition

சார்பு நீதிமன்றம், கொடுமுடி, ஈரோடு மாவட்டம்

அசல் வழக்கு எண்.200 /2025

The Oaths Act 1969, Act No.44/1969 விதிமுறைகளின்படி 08.04.2026ம் நாளாகிய இன்று **திருமதி.P.ஸ்ரீதேவி.,எல்.எல்.எம்.,** அவர்களால் சாட்சியம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சோமசுந்தரம் | தொழில் | : | |
| த/பெ.பெயர் | : | குப்புசாமி | கிராமம் | : | |
| வயது | : | 72 | மாவட்டம் | : | |

**வா.சா: 1 முதல் விசாரணை**

நான் இந்த வழக்கின் வாதி. நான் இந்த வழக்கில் என்னுடைய நிரூபண பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள விபரங்கள் தெரியும், அதிலுள்ள கையெழுத்து என்னுடையதாகும். எனது நிரூபண வாக்குமூலத்தை முதல் விசாரணையாக ஏற்று, வழக்குரையில் கோரியுள்ளவாறு பரிகாரம் வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

1) 20.06.1972 தேதியிட்ட பத்திர எண்.612/1972 கொண்ட பாகப்பத்திரம் சான்று நகல் வா.த.சா.ஆ.1

2)தாவா பொது வண்டிப்பாதையின் இணையதள பதிவிறக்க நகல் பட்டா எண்.705 வா.த.சா.ஆ.2

3) ரீ.ச.எண்.551/7ன் ஆ பதிவேடு இணையதள பதிவிறக்க நகல் வா.த.சா.ஆ.3

4)ரீ.ச.எண்.551/8ன் ஆ பதிவேடு இணையதள பதிவிறக்க நகல் வா.த.சா.ஆ.4

**Copy of Deposition**

5) ரீ.ச.எண்.551/7ன் வரைபட நகல் (FMB)இணையதள பதிவிறக்க நகல் வா.த.சா.ஆ.5

6)ரீ.ச.எண்.551/8ன் வரைபட நகல் (FMB)இணையதள பதிவிறக்க நகல் வா.த.சா.ஆ.6

7)ரீ.ச.எண்.550/10 மற்றும் ரீ.ச.எண்.551/7,8 ஆகியவற்றின் செயற்கை கோள் புகைப்படம் இணையதள பதிவிறக்க நகல் வா.த.சா.ஆ.7

8)ரீ.ச.எண்.550/10 பொது வண்டிப்பாதையின் இணையதள பதிவிறக்க நகல் பட்டா எண்.806 வா.த.சா.ஆ.8

9) ரீ.ச.எண்.550/10ன் ஆ பதிவேடு இணையதள பதிவிறக்க நகல் வா.த.சா.ஆ.9

10) ரீ.ச.எண்.550/10ன் வரைபட நகல் (FMB) இணையதள பதிவிறக்க நகல் வா.த.சா.ஆ.10

11) ரீ.ச.எண்.561/2Aன் பட்டா எண்.2376 இணையதள பதிவிறக்க நகல் வா.த.சா.ஆ.11

12) ரீ.ச.எண்.561/2Aன் ஆ பதிவேடு இணையதள பதிவிறக்க நகல் வா.த.சா.ஆ.12

13) ரீ.ச.எண்.561/2Aன் வரைபடம் (FMB) இணையதள பதிவிறக்க நகல் வா.த.சா.ஆ.13

14) ரீ.ச.எண்.561/2Aன் செயற்கைகோள் புகைப்படம் இணையதள பதிவிறக்க நகல் வா.த.சா.ஆ.14

15) அசல் வழக்கு எண்.152/2024ன் இறுதி நிலை தீர்ப்பாணை சான்று நகல் வா.த.சா.ஆ.15 ஆகியவை குறியீடு செய்யப்படுகிறது.

**Copy of Deposition**

குறுக்கு விசாரணை:–(1ம் பிரதிவாதி தரப்பில்)

ஆதியில் என் அப்பாவிற்கும் அவரது பங்காளிகளும் வா.த.சா.ஆ.1ன்படி 1972ம் வரும் பாகபிரிவினை செய்து கொண்டார்களா என்றால் சரிதான். மேற்படி பாககறார் பத்திரத்தில் எந்தெந்த சொத்திற்கு எப்படி போக வேண்டும் என்று பாதை பாத்தியம் கண்டு பொது ஷரா எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். பொது ஷராவில் தடத்தின் நீள அகலம் கண்டு எழுதப்படவில்லை என்றால் சரிதான். அந்த தடத்தின் அகலம் 21 அடி நீளம் 388 ஆகும். அந்த தாவா தடத்திற்கு வடபுறமும், தென்புறமும் பாலசுப்ரமணி பூமி உள்ளது. மேற்படி பாலசுப்ரமணி 11 மற்றும் 12 பிரதிவாதிகளின் தந்தை என்றால் சரிதான். தாவா தடம் ரீ.ச.எண்.550/10 , ரீ.ச.எண்.551/7,8 பொது பாதை வழியாக வந்து எனக்கு பாத்தியப்பட்ட பூமிக்கு சென்று கொண்டிருக்கிறோம் என்றால் சரிதான். எனது அப்பாவிற்கு பாத்தியப்பட்ட சொத்து பொறுத்து இந்த நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.152/2024 தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி வழக்கில் நான் 3ம் பிரதிவாதி என்றால் சரிதான். மேற்படி வழக்கு முழு விசாரணைக்கு பிறகு இறுதி நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி இறுதி நிலை தீர்ப்பாணையின் படி எனக்கு எந்த அட்டவணை சொத்து ஒதுக்கப்பட்டது என்றால் C and G சொத்து ஒதுக்கப்பட்டது. இறுதி நிலை தீர்ப்பாணையில் பங்குதாரர்கள் அனைவருக்கும் அவரவர் சொத்தை அடையும்பொருட்டு பாதை அமைத்து பிரிக்கப்பட்டது என்றால் சரிதான். அதன்படி தாவா தடத்தை பயன்படுத்தி தாவா தடத்தில் இருந்து மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி சென்று பின்னர் வடக்கு நோக்கி திரும்பிதான் எனது சொத்தை அடைய வேண்டும் என்றால் சரிதான். அசல் வழக்கு எண்.152/2024 இறுதி நிலை தீர்ப்பாணையில் 1ம் பிரதிவாதிக்கு I ஷெட்யூல் சொத்து ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். I ஷெட்யூல் சொத்தில் மேபுற ஒதுக்கப்பட்ட சொத்தில் பாலசுப்ரமணியம் பங்கிற்கு வடபுறமாக உள்ளது என்றால் சரிதான். நான் தாவா தடத்தின் வழியாகவும் இறுதி நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்ட பாதையின் வழியாக செல்லாமல் பாலசுப்ரமணியம் பூமியின் வழியாக வந்து 1ம் பிரதிவாதியின் பூமியின் வழியாக செல்வதைத்தான் ஆட்சேபணை செய்தார்கள் என்றால் சரிதான். நான் தாவா தடத்தின் வழியாகவும் இறுதி நிலை

## Copy of Deposition

தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்ட பாதையின் வழியாகவும் செல்வதற்கு 1ம் பிரதிவாதி எந்த காலத்திலும் ஆட்சேபணை செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கு செலவு தொகையுடன் தீர்ப்பாவதற்கு 1ம் பிரதிவாதிக்கு ஆட்சேபணை இல்லை.

**6 முதல் 10 பிரதிவாதிகள் 1ம் பிரதிவாதியின் குறுக்கு விசாரணையை தனதாக ஏற்றுக்கொள்கிறார்கள்.**

குறுக்கு விசாரணை:–(2 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில்)

எனது நிரூபண வாக்குமூலம் பத்தி 7ல் விவசாய தேவைக்காக நான் கனரக வாகனங்களை கொண்டு செல்ல முற்பட்டபோது 1 முதல் 12 பிரதிவாதிகள் குறுக்கீடு செய்து சட்டவிரோதமாக தடுத்த காரணத்தினால் வேறு வழியின்றி எனது தட பாத்திய உரிமையை நிலை நாட்ட இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று நான் கூறியுள்ள சங்கதி வழக்கிற்காக பொய்யாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:– இல்லை.**

| |
|---|
| Taken down by me in Open Court read over to the witness and acknowledge by |
| Interpreted<br>Him / Her To Be Correct<br>P SRIDEVI Digitally signed by P SRIDEVI Date: 2026.04.08 16:22:12 +0200<br>Subordinate Judge,<br>Kodumudi |